2015 பிப்ரவரி 19]

அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெறும் அரசு கண்டிப்பாக பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

26—

கால்நடைக் கிளை நிலையம்

***52416—திரு. ஆ.க. அரங்கநாதன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், விருதுவிலங்கினான் ஊராட்சியில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படுத்துக்கொண்டே ஜெயிப்பேன் என்று படுதோல்வி அடைந்த தலைவர்கள் எல்லாம் உண்டு. ஆனால், ஒரு கடிதத்திலேயே 96,500 வாக்குகளுக்கு மேலாக பெற்று, கழகத்தை வெற்றி பெறச் செய்த, (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் வானின் ஒரே தலைவர் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், விருதுவிலங்கினான் ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடை அலகுகள் 3,000–க்கும் அதிகமாக உள்ளதால், மேற்படி கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 பிப்ரவரி 19

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடக்கின்ற இந்த அரசு, நிச்சயமாக வருகின்ற நிதியாண்டிலேயே அங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன் அவர்கள்.

திரு. ஆ.க. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், கழகத்தின் காவல் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட விருதுவிலங்கினான் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடக்கும் இந்த அரசு, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையினை பரிசீலனை செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன் அவர்கள்.

2015 பிப்ரவரி 19]

திரு. ஆ.க. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவண்ணாமலை ஒன்றியம், விருதுவிலங்கினான் ஊராட்சியில் 5,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. மேலும் அப்பகுதி மக்கள் கால்நடைகள் நோய்வாய்ப்படும்போது 17 கி.மீ. தொலைவில் உள்ள நவம்பட்டு ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்வது மிகவும் சிரமமாக உள்ளது. மக்களின் நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலேயே கால்நடைக் கிளை நிலையம் அமைத்திட ஆவன செய்யவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, அந்தக் கிராமத்தைத் துறைவாயிலாக ஆய்வு செய்து, அங்கு 5,000–க்கும் மேற்பட்ட கால்நடை அலகுகள் இருந்தால், மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடக்கின்ற இந்த அரசு, இந்த நிதியாண்டிலேயே கால்நடைக் கிளை நிலையம் அமைக்க ஆவன செய்யும் (குறுக்கீடு) என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, உட்கார்ந்துகொண்டு இப்படி சத்தமாக பேசிக்கொண்டிருக்கக் கூடாது. இது நன்றாக இல்லை, நீங்கள் செய்வது சரியல்ல. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் அமைதியாக உட்காருங்கள். சூழ்நிலைக்கேற்றவாறுதான் வாய்ப்பு கொடுக்கப்படும். கேட்கின்றபோதெல்லாம் பேச அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) அப்படியெல்லாம் வாய்ப்பு தர முடியாது. உட்காருங்கள்.

வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.